Ontario

# வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் உங்கள் பிள்ளைக்கு உதவுதல்

## பெற்றோருக்கான ஒரு வழிகாட்டி

பாலர் பள்ளி முதல் 6ம் வகுப்பு வரை

The Literacy and Numeracy Secretariat
எழுத்தறிவு கணித அறிவு காரியாலயம்

Tamil

இது எழுத்தறிவு கணித அறிவு காரியாலயத்தின் பிரசுரிப்பாகும்.

# பொருளடக்கம்

**கல்வியறிவு பற்றியும் இவ்வழிகாட்டி பற்றியும் ஒரு வார்த்தை** ................2

**கல்வியறிவின் முக்கியத்துவம் என்ன?** ........................................5

**பாலர் பள்ளி முதல் 3ம் வகுப்பு வரை** ........................................5
எனது பிள்ளை கற்றோன் ஆவது எப்படி? ..................................5
எனது பிள்ளைக்கு நான் எப்படி உதவுவது? ..............................8
எவ்விதமான ஆலோசனைகளை நான் உபயோகிக்கலாம்? ...............9
உத்தி 1 - உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள் ..........................9
உத்தி 2 - வாசிப்பதையும்
எழுதுவதையும் சுவாரசியமாக்குங்கள் ..................................9
உத்தி 3 - தினமும் வாசியுங்கள் ....................................10
உத்தி 4 - புத்தகங்களைப்பற்றி பேசுங்கள் ..........................11
உத்தி 5 - உங்கள் பிள்ளை வாசிப்பதை கேளுங்கள் ..............12
உத்தி 6 - உங்கள் பிள்ளைக்கொரு உதாரணமாயிருங்கள்........13

**வகுப்பு 4 முதல் வகுப்பு 6 வரை** ..........................................14
எனது பிள்ளைக்கு நான் எப்படி உதவுவது? ..............................15
எவ்விதமான உதவிகளை நான் உபயோகிக்கலாம்? ....................15
உத்தி 1 - உங்கள் பிள்ளை
வாசிப்பதை புரிந்து கொள்ள உதவுங்கள் ..........................15
உத்தி 2 - உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள் ......................16
உத்தி 3 - வாசிப்பதை விரும்பச் செய்யுங்கள் ......................17
உத்தி 4 - உங்கள் பிள்ளையை எழுதுவதற்கு ஊக்குவியுங்கள் ..18
உத்தி 5 - கலைகள் மூலம்
கல்வியறிவிற்கு உயிர் கொடுங்கள் ..................................19
உத்தி 6 - ஒரு நற்போக்குடன் உதாரணமாக இருங்கள் ..........19
உத்தி 7 - “திறனாய்வுடைய கல்வியறிவை”
வீட்டிற்குள் கொண்டு வாருங்கள் ......................................20

**நான் எங்கு உதவி பெறலாம்?** ................................................22
உங்கள் பிள்ளையின் ஆசிரியர் ..........................................22
சமூகத்திலுள்ள ஏனையவர்கள் ..........................................23
அரசாங்க வளங்கள் .......................................................23

**இளம்பிராயத்தினருக்கான சில இணைய வளங்கள்** ..........................24

இப்பிரசுரிப்பு கல்வி அமைச்சின் (Ministry of Education) இணையதளத்தில்
http://www/edu.gov.on.ca கிடைக்கும்.

# கல்வியறிவு பற்றியும் இவ்வழிகாட்டி பற்றியும் ஒரு வார்த்தை

உங்கள் பிள்ளையின் கல்வியில் நீங்கள் முக்கியமான பங்குகாரர் ஆவீர்கள்.

உங்கள் பிள்ளை கற்பதற்கு உதவும் வகையில், பெற்றாராகிய* நீங்கள் தனித்தன்மையுள்ள அனுபவங்களை கொண்டு வரலாம். உங்கள் பிள்ளை வாசிக்கவும், எழுதவும் உதவக்கூடிய ஆலோசனைகளை உங்கள் உபயோகத்திற்காக இவ்வழிகாட்டி கொண்டுள்ளது. பாலர் தொடக்க பள்ளிகூடம் முதல் மூன்றாம் வகுப்பு பிள்ளைகளுக்கான ஆலோசனை உத்திகள், அவர்கள் வாசிக்கவும், எழுதவும் கற்பதற்கு உதவக்கூடியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. 4ம் வகுப்பு முதல் 6ம் வகுப்பு வரையுள்ள பிள்ளைகளுக்கான உத்திகள், அவர்கள் சிக்கலான பதிப்புகளை வாசிக்கவும், எழுதும் திறனில் முன்னேற்றம் கொள்ளவும் உதவக்கூடியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

இந்த வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தையும் நீங்கள் செய்ய வேண்டியதில்லை! பரந்த அளவில் செய்யக்கூடிய பலவாறான காரியங்கள் கருத்துக்களாக கூறப்பட்டுள்ளன. இவற்றை படித்து, உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் உதவக்கூடிய கருத்துக்களை தெரிவு செய்யுங்கள். உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து சுவாரசியமாக செய்யக்கூடியதும், மகிழ்ச்சி தருவதுமான மற்றய செயல்களைப்பற்றியும் நீங்கள் யோசிக்கலாம்.

விசேட தேவைகளுள்ள ஒரு பிள்ளையின் பெற்றாராக நீங்கள் இருந்தால், உங்கள் பிள்ளையின் தேவைகளுக்கு பொருத்தமாக இவ்வழிகாட்டியில் விபரிக்கப்பட்டுள்ள செயல்முறைகளை நீங்கள் மாற்றியமைக்கலாம்.

எழுத்தறிவு என்பது வெறும் வார்த்தைகளை மட்டும் வாசிப்பதற்கு அப்பாற்பட்டது. இது புத்தகங்கள், சஞ்சிகைகள், இணையங்கள், கைநூல்கள், அறிவிக்கை பலகைகள், விளம்பரங்கள், திரைப்படங்கள் அத்துடன் உரையாடல்கள் ஆகியவற்றிலுள்ள பாஷையின் அர்த்தத்தை புரிந்து கொள்வதாகும். அத்துடன், எழுத்தறிவென்பது வாசிப்பதையும், கேட்பதையும் விமர்சனம் செய்வதுமாகும். அதே சமயம், இதன் அர்த்தம், உங்கள் எண்ணங்களை பேச்சு, எழுத்து, மற்றய ஊடகங்கள் என்பன மூலம் செயல்படுத்தக்கூடிய விதத்தில் தெரியப்படுத்த இயலுமாகவிருப்பதாகும்.



* இவ்வழிகாட்டியில், ‘‘பெற்றார்’’ என்பது பிள்ளைகள் வாசிக்கவும், எழுதவும் உதவக்கூடியவர்களான வழிகாட்டி, பராமரிப்பவர் மற்றும் குடும்ப அங்கத்தவர்களை உள்ளடக்கின்றது.

கருத்துக்களை கலந்தாலோசிப்பது, கண்ணோட்டங்களை பகிர்ந்து கொள்வது என்பனவே கல்வியறிவின் மையக் கூறுகளாகும். ஒன்டாரியோவில் பல்வேறு வகைப்பட்ட பின்னணிகளிலிருந்து வரும் குடும்பங்கள் எழுத்தறிவைப்பற்றிய தனிப்பட்ட அனுபவங்களையும், செழிப்பான பாரம்பரியத்தையும் கொண்டுவருகின்றனர். வாசிப்பது, எழுதுவது, அத்துடன் மற்ற வகைகளில் தொடர்பு கொள்வது என்பவற்றை தரும் பலதரப்பட்ட அனுபவங்கள், பிள்ளையின் வகுப்பறையில் கலந்தாலோசிப்பதற்கான அர்த்தமுள்ள குறிப்புகளாக பயன்படும். பிள்ளைகளின் இடையே பொதுவாக காணப்படுவதை ஏற்றுக் கொள்வது எவ்வளவிற்கு முக்கியமோ அதே போல மாணவர்களுக்கு இருக்கக்கூடிய தனிப்பட்ட அநுபவங்களையும் முக்கியமானவையாக ஏற்றுக்கொள்வதன் அவசியத்தை உங்கள் பிள்ளையின் ஆசிரியர் அறிவார். பலதரப்பினரையும் அடையாளம் காண்பதன் மூலம் உண்மையான பகிர்ந்து கொள்ளுதல் சாத்தியமாகிறது. ஒரு பெற்றார் என்ற முறையில், உங்கள் பிள்ளைக்கு வாசிக்கவும் எழுதவும் உதவும்போது இந்த கருத்துக்களை நீங்கள் மீள்வலியுறுத்தலாம்.

இந்த வழிகாட்டியை படிக்கும் போது நீங்கள் மனதில் கொள்ள வேண்டிய சில விடயங்கள்:

- கல்வியறிவு என்பதன் அர்த்தம் தொடர்ந்து விரிவுறுகிறது:
  - கல்வியறிவு என்பது அச்சிலுள்ளவற்றை வாசிக்கும் திறன் என்பதற்கு அப்பாற்பட்டது.
  - கல்வியறிவு என்பது வாசிக்கவும், எழுதவும் மற்றும் ஏனையோருடன் உரையாடவும், கேட்கவும் உள்ள திறன் என்பதுடன், பலதரப்பட்ட ஊடகங்கள் மூலம் கருத்துக்களையும், எண்ணங்களையும் பிரதிபலிக்கவும், நோக்கவும் இயலும் ஆற்றலாகும். அதே சமயம், இவை யாவையும் செய்யும் அதே வேளையில் திறனாய்வுடன் சிந்திக்கும் திறனுமாகும்.
  - உங்களது பிள்ளையின் ஆசிரியர் “ஆழ்ந்த கல்வியறிவு” என்று குறிப்பிடக்கூடும். இது நியாயம், சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றை இலக்காக கொண்டு, திறனாய்வுடன் சிந்திக்கும் ஒரு வழியாகும்.





எழுத்தறிவிற்கான திறமைகளை வளரச் செய்வதற்கு உங்கள் பிள்ளைக்கு உதவும் வகையில் உங்களுக்கு உதவுவதற்கு இந்த வழிகாட்டி மட்டுமன்றி, பல உபாயங்கள் உள்ளன. பிள்ளைகளுடன் சேர்ந்து செயல்படும் ஆசிரியர்கள், நூலகர்கள், சமூக நிறுவன ஊழியர்கள் ஆகியோருடன் கலந்தாலோசிக்க நீங்கள் விரும்பலாம். அத்துடன் முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புக்கான ஒன்டாரியோ பாஷை கல்விதிட்டம், கல்வி தரம், Education Quality and Accountability Office நடத்தும் மாவட்ட ரீதியான தேர்வுகள் பற்றிய விபரங்களை பெற்றுக் கொள்ளவும் நீங்கள் விரும்பலாம். இந்த வளங்களைப் பற்றிய மேலதிக விபரங்கள் இந்த வழிகாட்டியின் 24வது பக்கத்திலுள்ளன.

ஆங்கிலம் உங்களது பிள்ளையின் முதல் மொழியாக இல்லாதிருப்பினும், இந்த வழிகாட்டி உதவியாக இருக்கலாம். உங்களது பிள்ளையின் முதல் மொழியிலேயே நீங்கள் உங்கள் பிள்ளைக்கு வாசிப்பது முக்கியமாகும். உங்கள் பிள்ளை அவருடைய முதல் மொழியை நன்கு அறிந்திருந்தால், ஆங்கிலத்தை கற்பது சுலபமாகவிருக்கும். உங்கள் பிள்ளை ஆங்கிலத்தில் வாசிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளும் போது, ஆங்கில மொழியில் அவரின் திறமையை வளர்த்துக் கொள்ளும் வகையில் இந்த வழிகாட்டியில் குறிப்பிட்டுள்ள பலதரப்பட்ட ஆலோசனைகளை நீங்கள் பாவிக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.





# கல்வியறிவின் முக்கியத்துவம் என்ன?

மக்கள் வாசிப்பதும் எழுதுவதும் பல வேறுபட்ட காரணங்களுக்காகவே:

- ஆர்வத்தினாலும் மகிழ்வுறவும்
- குடும்பத்தவருடனும் நண்பர்களுடனும் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு
- தமக்கு ஏற்படும் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள உதவும் விபரங்களை பெற்றுக் கொள்ளவும் உபயோகிக்கவும் அத்துடன் தீர்வுகள், தெரிவுகள் செய்வதற்கும்
- உலகத்தினை பற்றி அறிந்து கொள்ளவும், தமது எண்ணங்களை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தவும்
- தொழில் விஷயங்களுக்கு

இவற்றிற்கெல்லாம் மேலாக, கல்வியறிவு என்பது நாம் சமுதாயத்தில் எப்படி தொடர்பு வைத்துக் கொள்கிறோம் என்பதாகும். இது சமுதாயம் நடைமுறைகள், உறவுகள், அறிவு, மொழி, கலாச்சாரம் எனபவற்றைப் பற்றியது. மற்றய தொடர்பு முறைகளுடன் சேர்ந்து கல்வியறிவும் நமது வாழ்க்கையில் ஒரு இடம் பெறுகிறது. இதனை பயன்படுத்துபவர்கள் கல்வியறிவை சாதாரணமாக எடுத்துக் கொண்டாலும், கல்வியறிவை பயன்படுத்த முடியாதவர்கள், இன்றைய உலகின் அநேகமான தொடர்பு முறைகளிலிருந்து ஒதுக்கப்படுகிறார்கள்.

வாசிக்கவும் எழுதவும் அறிந்திருப்பது பாடசாலையில் வெற்றி பெருவதற்கு பாதையமைத்து, தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும், உயர்ந்த எதிர்பார்ப்புகளை அமைப்பதற்கும், உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும் வழிவகுக்கும்.

# தொடக்க பள்ளிக்கூடத்திலிருந்து 3ம் வகுப்பு வரை

## எனது பிள்ளை எழுத்தறிவுள்ளதாவது எப்படி?

உங்கள் பிள்ளை வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ள ஆரம்பிப்பதற்கு சிறந்த சமயம், அவர் மிகவும் இளம்பிராயத்திலுள்ள போதேயாகும். இந்த சமயத்தில் தான் உங்கள் பிள்ளை வாசிப்பதிலும், எழுதுவதிலும் திடமான மனப்பாங்கு உள்ளவராயிருப்பார். அதே சமயம், எழுத வாசிக்க தேவையான அடிப்படை திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் ஆரம்பிக்கின்றார். வாசிப்பதற்கும் எழுதுவதற்குமான நுணுக்கங்களை பற்றி பேசுவதை விட, உங்கள் பிள்ளை வாசிக்கவும் எழுதவும் ஆரம்பிக்கும் போது அப்பிள்ளையின் கருத்துக்களை அவருடன் கலந்தாலோசியுங்கள். இத்தகைய கலந்தாலோசனைகள் வாசிக்கும் எழுதும் ஆற்றலிருப்பதன் உண்மையான அர்த்தத்தை உங்கள் பிள்ளை புரிந்துக் கொள்ள உதவுகிறது.

வாசிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்வது ஒரே சமயத்தில் நடப்பதில்லை. இது, இறுதியில் சுதந்திரத்திற்கும் சரளத்தன்மைக்கும் வழிவகுக்கின்ற பல கட்டங்களைக் கொண்டது. தொடர்ந்து வரும் வடிவமைப்பு, எழுதுவதிலும் வாசிப்பதிலும் உள்ள இந்த கட்டங்களின் ஒரு மேற்பார்வையை காட்டுகிறது.



## வாசிப்பதிலும், எழுதுவதிலுமுள்ள கட்டங்கள்

1. ஒரு பிள்ளை, உண்மையில் வாசிக்கவும் எழுதவும் ஆரம்பிப்பதற்கு முன்பு:

- புத்தகங்களை வாசிப்பதன் மூலம், காந்த எழுத்துகளுடன் விளையாடுவதன் மூலம், எழுத்துக்களுள்ள கட்டமைப்புகளுடன் விளையாடுவதன் மூலம் படங்களுள்ள வார்த்தைகளை கற்றுக் கொள்கிறது.
- பாடல்கள், எதுகைகள், போக்குவரத்து அடையாளங்கள், உணவு பொறிகளில் உள்ள அடையாளங்கள் என்பவற்றிலிருந்து வார்த்தைகளை கற்றுக் கொள்கிறது.
- அச்சிடல் பற்றி அறிந்து கொள்கிறது - உதாரணமாக ஒரு கதை எங்கு ஆரம்பித்து எங்கு முடிவடைகிறது - அச்சிடல் எப்படி தொடர்கிறது என்பது.
- புத்தகங்களை வாசிக்கவும், வாசிக்கப்படுவதையும் விரும்புகிறது.
- படங்கள், இலச்சினைகள், எழுத்துக்கள் என்பவற்றை பாவித்து தனது எண்ணங்களை அச்சிடலாம் என்பதை புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறது.
- ஒரு வாசகர் போல நடந்து கொள்கிறது - உதாரணமாக, ஒரு புத்தகத்தை கையில் பிடித்து வாசிப்பது போல பாவனை செய்கிறது.
- ஒரு எழுத்தாளர் போல நடந்து கொள்கிறது. உதாரணமாக, ஒரு பென்சிலை கையில் பிடித்து எழுதுவது போல பாவனை செய்கிறது.
- ஒரு கதையை சொல்லவும், திரும்பத் திரும்ப சொல்லவும் படங்கள், ஞாபகசக்தி ஆகிய இரண்டையும் பாவிக்கின்றது.

2. ஒரு பிள்ளை முதன் முதலாக வாசிக்கவும், எழுதவும் ஆரம்பிக்கும் போது:

- கதைகள் சொல்லவும், தகவல்களை தெரிவிக்கவும், எழுத்துவடிவிலுள்ள பதிப்புகளை, பாவிக்கப்படுவதை அறிந்துக் கொள்கிறது.
- வாசிப்பதற்கு யோசனைகளை வழங்கும்போது ஆர்வம் காட்டுகின்றது.
- எழுத்திலுள்ள வார்த்தைகளையும் கூறப்படும் வார்த்தைகளையும் பொருந்திப் பார்க்கவும், ஓசைகளுக்கும் வார்த்தைகளுக்கும் உள்ள தொடர்பை கண்டுகொள்ளவும் ஆரம்பிக்கிறது.
- வாசிப்பதில் பரீட்சித்துப் பார்க்க ஆரம்பிப்பதுடன், வாசிக்கும் போது வார்த்தைகளை உரக்க சொல்ல முயற்சிக்கவும் உடன்படுகிறது.
- வார்த்தைகளை புரிந்து கொள்ள படங்கள் உதவியாக இருப்பதை அறிவதுடன், படங்கள் வெளிப்படுத்தும் கருத்தையே வார்த்தைகளும் வெளிப்படுத்துவதை அறிகிறது.
- எழுதுவதில் பரீட்சித்துப் பார்க்க ஆரம்பிக்கிறது. உதாரணமாக படங்களை பாவிக்கிறது, எழுத்துக்களை ஒத்த இலச்சினைகளாக எழுதுகிறது, பல்வேறு எழுத்துக்களை குழுவாக எழுதுகிறது, உண்மையான எழுத்துக்களை எழுதி அவற்றிடையே இடைவெளி விடுவதன் மூலம் வார்த்தைகளை எழுதுகிறது.
- வார்த்தைகளும் வடிவங்களும் வேறுபட்டவை என புரிந்து கொள்கிறது.



3. வாசிக்கவும் எழுதவும் ஆரம்பிக்கும் போது, ஒரு பிள்ளை:

- அச்சிலுள்ள வார்த்தைகளை, படங்கள் மூலம் அடையாளம் கண்டுக் கொள்ள பல வழிமுறைகளை பாவிப்பதன் மூலம் மேலதிக தன்னம்பிக்கை காட்டுகிறது.
- வெவ்வேறுபட்ட புத்தகங்களை வாசிக்க ஏற்றவகையில் தனது வாசிப்பை மாற்றியமைத்துக் கொள்கிறது.
- பல வார்த்தைகளை அடையாளம் காண்பதோடு, வார்த்தைகளின் அர்த்தத்தை புரிந்து கொள்கிறது: அத்துடன், புதியவற்றை வாசிக்கவும் முயற்சிக்க உடன்படுகிறது.
- சரியான எழுத்துக்களை பாவித்தும், வார்த்தைகளுக்கிடையே சரியான இடைவெளி விடுவதன் மூலமும், முற்றுப்புள்ளி, கேள்விக்குறி போன்ற குறியீடுகளை பாவிப்பதன் மூலமும் எளிமையான வசனங்களை எழுதுகிறது.
- எழுதுவதை பெரிதும் விரும்புவதுடன், வெவ்வேறு விதங்களில் எழுதுவதில் ஆர்வம் காட்டுகிறது. உதாரணமாக சமையல் பொருட்களின் பட்டியல், சிறிய குறிப்புகள், வாழ்த்து அட்டைகள், லேபல்கள்.
- எளிமையான எழுத்திலுள்ளவற்றை திட்டமிடவும், மீள படிக்கவும், மீள சரிப்படுத்தவும் ஆரம்பிக்கிறது.

4. சரளமான வாசகர், எழுத்தாளர் என்ற வகையில் ஒரு பிள்ளை:

- வாசிக்கும் போது வார்த்தைகளையும் அவற்றின் அர்த்தத்தையும் அடையாளம் காண்பதற்கு பல வகையான வழிமுறைகளை பாவிக்கிறது.
- புத்தகங்களிலுள்ள கருத்துக்களையும், அனுபவங்களையும் தன்னுடைய சொந்த அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற வகையில் தொடர்பு ஏற்படுத்துகிறது.
- கதைகளில் நிகழவுள்ளதை முன்னரே யூகிக்க முடிகிறது. அத்துடன் பலதரப்பட்ட பதிப்புகளை வாசிக்கிறது.
- வாசிப்பதும் எழுதுவதும் நல்லவையே என்று அறிவதுடன் தனது சொந்த ஊக்கத்திலேயும் குறிப்பிட்ட நோக்கத்திற்கும் எழுதி வாசிக்கின்றது.
- சொற்களை சரியாக எழுத்துகூட்டுவதற்கு பல்வேறு வழிகளை உபயோகிக்க ஆரம்பிக்கிறது.
- பல்வேறு வகையான வசனங்களை எழுதும்போது பாவிக்கிறது. (உதாரணமாக கூற்றுக்கள், கேள்விகள்). அத்துடன் வசனங்களை பந்திகளாக நெறிப்படுத்த ஆரம்பிக்கிறது.
- திட்டமிடவும், மீள படிக்கவும், திருத்தியமைக்கவும், தனது எழுத்துப் பதிப்புகளை வெளியிடவும் பல்வேறு வழிகளை பாவிக்கிறது.




## எனது பிள்ளைக்கு நான் எப்படி உதவுவது?

நீங்கள் தான் உங்களது பிள்ளையின் முதன்மையான, முக்கியமான ஆசிரியர். உங்கள் பிள்ளைக்கு வாசிக்கவும், எழதவும், திறனாய்வுடன் சிந்திக்கவும், நீங்கள் உதவும் போது, கல்வி எனும் வளமான உலகிற்கு கதவுகளை திறக்கிறீர்கள்.

கதைகளையும், செய்தித்தாள் கட்டுரைகளையும் நீங்கள் உரக்க வாசிப்பதை கேட்பதன் மூலம் உங்கள் பிள்ளை வாசிப்பதை கற்றுக் கொள்ள ஆரம்பிக்கலாம். தானாகவே கதைகளையும் மற்றய பதிப்புகளையும் வாசிப்பதில் உங்கள் பிள்ளை ஆர்வம் காட்டுவது விரைவில் நடக்கும். புத்தகங்களிலும் சஞ்சிகைகளிலும் கூறப்படும் கருத்துகளைப்பற்றி பேசுவதும், உங்கள் பிள்ளையை சிந்திக்கவும் கேள்விகளை கேட்க தூண்டுவதும், தான் வாசிப்பதை பற்றிய தனது அபிப்பிராயத்தைப் பற்றி பேசுவதும் முக்கியமாகும்.

உங்கள் உதவியுடன் சுலபமாக வாசிக்கவும் எழுதவும் உங்கள் பிள்ளை கற்றுக் கொள்ளலாம். எழுதுவதிலும் வாசிப்பதிலும் சரளத்தை விருத்தி செய்ய அடிக்கடி பயிற்சி செய்வது உங்கள் பிள்ளைக்கு உதவும். அதே சமயம் தான் வாசிக்கும் புத்தகங்கள், பதிப்புகள் பற்றி திறனாய்வுடன் சிந்திக்க உங்கள் பிள்ளை கற்றுக் கொள்ளும்.

கல்வியறிவிற்கான நடைமுறைகளை குடும்பங்கள் எங்கும் ஏற்படுத்தலாம். கல்வியறிவை விருத்தி செய்வது என்பது பிள்ளைகள் பாடசாலையில் உள்ளபோது செய்யப்படுவது மட்டுமல்ல. நீங்கள் எங்குள்ளபோதும், எப்பொழுதாயினும் உங்கள் பிள்ளை கற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை நீங்கள் தேடுவது முக்கியம். நீங்கள் எங்கிருந்தாலும், என்ன செய்து கொண்டிருந்தாலும், கல்வியறிவு என்பது அன்றாட வாழ்வில் ஒரு பங்காகும். கல்வியறிவு பல்வேறு சந்தர்ப்பங்களில் உபயோகிக்கப்படுகிறது. உதாரணமாக, சாப்பாடு அட்டைகள் வாசிக்கும்போது, கால்பந்து மைதானத்தில் மற்றய பிள்ளைகளுடன் பேசும் போது, குடும்பத்தாருடன் ஒரு திரைப்படத்தைப் பற்றி கலந்துரையாடும் போது, அல்லது குளிர்சாதனப் பெட்டியில் ஒட்டுவதற்காக ஒரு பொருள் பட்டியலை எழுதும்போது.

உங்கள் பிள்ளைக்கு ஊக்கமளித்து, அவரில் உங்களுக்குள்ள நம்பிக்கையை காட்டுவது முக்கியமாகும். உங்கள் பிள்ளையின் சாதனைகளுடன் பிற பிள்ளைகளின் சாதனைகளை ஒப்பிட்டு பேசுவதை தவிர்க்கவும். வாசிக்கவும் எழுதவும் கற்றுகொள்தல் திடீரென நடைபெறுபவை அல்ல என்பதை நினைவு கொள்ளுங்கள். அத்துடன் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வது சுலபமல்ல என்றும், ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளும் வேகம் வேறுபடும் என்பதையும் பிள்ளைகள் தெரிந்து கொள்ள வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோரது உதவியுடனும் கிரமமாக பயிற்சி செய்வதாலும் பிள்ளைகள் காலப்போக்கில் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்கிறார்கள்.



# என்ன உத்திகளை நான் உபயோகிக்கலாம்?

## உத்தி 1 | உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்

உங்கள் பிள்ளையுடன் பேசுவதும் அவர்களை உங்களுடன் பேசுவதற்கு தூண்டுவதும் மிக முக்கியமாகும். கல்வியறிவிற்கும், மொழிக்கும் உங்கள் பிள்ளையின் அறிமுகம் கேட்பதும் பேசுவதுமாகும். பேசுவது, பாடுவது போன்ற செயல்கள் உங்கள் பிள்ளைக்கு மொழியின் கட்டமைப்பையும் ஓசைகளையும் கற்பித்து இதன் மூலம் அவர்கள் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வதை இலகுவாக்கும்.

உங்கள் பிள்ளை வார்த்தைகளினதும் மொழியினதும் அருமையை உணர்வதற்கு, நீங்கள் பின்வருவனவற்றை செய்யலாம்:

- உங்களைப்பற்றியும், உங்கள் பிள்ளைகளின் தாத்தா பாட்டியைப்பற்றியும், மற்றய உறவினர்களை பற்றியும் கதைகளை கூறுங்கள்.
- உங்களிடம் உங்கள் பிள்ளை தனது அன்றைய தினம் பற்றி - அன்றாட செயல்கள், போட்டி மற்றும் வேடிக்கை விளையாட்டுகளைப் பற்றி பேசத் தூண்டுங்கள்.
- பல கேள்விகளை கேட்டு, உங்கள் பிள்ளையின் சிந்தனைப் பற்றி உங்களுக்குள்ள ஆர்வத்தை அவருக்கு தெரியப்படுத்துங்கள்.
- முடிந்த வரையில் நீங்கள் செய்பவையைப் பற்றியும் சிந்திப்பதைப் பற்றியும் உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்.
- உங்கள் பிள்ளை என்ன உணர்கிறார், எண்ணுகிறார் என்பது பற்றி உங்களுடன் பேசத் தூண்டுங்கள்.
- இடைமறிக்காதீர்கள்! உங்கள் பிள்ளை பாவிக்க விரும்பும் வார்த்தைகளை தானாகவே தேடிக்கொள்ளட்டும்.
- பாடல்கள் பாடுங்கள்: அரிச்சுவடு பாடல், பாலர் வகுப்பு பாடல்கள் என்பனவற்றை பாடி, உங்கள் பிள்ளையையும் சேர்ந்து பாடத் தூண்டுங்கள்.
- புதிர், எதுகை விளையாட்டுக்களை விளையாடுங்கள்.

## உத்தி 2 | வாசிப்பதையும் எழுதுவதையும் சுவாரசியமானதாக்குங்கள்

வாசிப்பதில் உங்கள் பிள்ளைக்கு ஆர்வம் ஏற்படுத்துவதற்கு மிகச் சிறந்த வழி, அவர்களுக்கு உரக்க வாசித்துக்காட்டுவதாகும். இது முழு குடும்பத்துக்கும் சுவாரசியமானது மட்டுமல்ல, வாசிப்பது என்றால் என்ன என்பதை கற்றுக் கொள்ளவும் உதவும். உங்கள் பிள்ளையை எழுதுவதற்கும் தூண்டுங்கள். உங்கள் பிள்ளைக்கு வாசிப்பதும் எழுதுவதும் சுவாரசியமானதாக்க நீங்கள் செய்யக்கூடிய சில:

- பல வகையான பதிப்புகளை வாசியுங்கள் - கதைகள், கவிதைகள், தகவல் நூல்கள், சஞ்சிகைகள், செய்திதாள்கள், மற்றும் நகைச்சுவைப்புத்தகங்கள்.
- நாடகத் தன்மையுடனும், உற்சாகத்துடனும் கதைகளை உரக்க வாசியுங்கள்! ஒரு கதையில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் வெவ்வேறு குரல்களை உபயோகியுங்கள். கதாபாத்திரத்தின் பெயருக்கு பதிலாக உங்கள் பிள்ளையின் பெயரை உபயோகியுங்கள். பொம்மைகள் செய்து, கதைகளை அவை மூலம் நடித்துக் காட்டுங்கள்.
- உங்கள் பிள்ளைக்கு மிகவும் பிடித்த கதைகளை திரும்பத் திரும்ப வாசியுங்கள்: உங்கள் பிள்ளைக்கு பிடித்தமான கதைகளையும் கதாசிரியர்களின் கதைப்புத்தகங்களையும் தெரிவு செய்யுங்கள்.



- திரும்பத் திரும்ப வரும் பகுதிகள் உள்ள கதைப்புத்தகங்களை வாசித்து, உங்கள் பிள்ளையையும் அதில் கலந்துக் கொள்ளச் செய்யுங்கள்.
- நீங்கள் வாசிக்கும்போது வார்த்தைகளை சுட்டிக்காட்டுங்கள். இது, உங்கள் பிள்ளைக்கு, பேசப்படும் வார்த்தைகளுக்கும் பக்கத்திலுள்ள வார்த்தைகளுக்குமிடையிலுள்ள தொடர்பை ஏற்படுத்த உதவும்.
- ஒரு கதையின் கருத்தை கலந்தாலோசித்து, கதாபாத்திரங்கள் பற்றி கேள்விகளை கேளுங்கள். இவ்வாறான சூழ்நிலையில், அடுத்ததாக என்ன நிகழும், உங்கள் பிள்ளை என்ன செய்வார், என்பவற்றை சிந்திக்கும் வகையில் உங்கள் பிள்ளையிடம் கேள்விகளை கேளுங்கள்.
- செய்தித்தாள் கட்டுரைகளிலுள்ள தகவல் பகுதிகள் பற்றிய முக்கிய கருத்துக்களை கலந்தாலோசியுங்கள்.
- உங்கள் பிள்ளைக்கு கதைப்புத்தகங்களையும், பதிப்புகளையும் பரிசாக கொடுக்குமாறு உங்கள் உறவினர்களையும் நண்பர்களையும் தூண்டுங்கள்.
- உள்ளூர் நூல் நிலையத்திற்கு உங்கள் பிள்ளையை அழைத்துச் செல்லுங்கள். குறுந்தட்டுகள் (CD-ROMs), ஒளிப்பேழைகள்;, இணையவரியகங்கள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றை பாருங்கள். உங்கள் பிள்ளை புத்தகங்களை இரவல் பெறுவதற்காக இலவசமாக தரப்படும் நூல்நிலையத்தின் அனுமதி சீட்டைப் பெற்றுக் கொடுங்கள்.
- ஒரு சஞ்சிகையின் சந்தாவை பெறுங்கள். உங்கள் பிள்ளை தனக்கென தபால் வருவதை பெரிதும் விரும்புவார்!
- காகிதத்திலோ, கணனி செய்தி மூலமோ உங்கள் பிள்ளைக்கு குறிப்புகள் எழுதுங்கள்.
- நண்பர்களுக்கும் உறவினருக்கும் பட்டியல்கள், அட்டைகள் எழுதவும் கணனி செய்திகளை அனுப்பவும் உங்கள் பிள்ளையை தூண்டுங்கள்.
- எப்போதும் குதூகலமாகவிருக்க நினைவு கொள்ளுங்கள். நீங்கள் எவ்வளவு நன்றாக அனுபவிக்கிறீர்களோ அந்தளவிற்கு அந்த அனுபவத்தை உங்கள் பிள்ளையும் ரசிப்பார்.

## உத்தி 3 | தினமும் வாசியுங்கள்

தினசரி நடவடிக்கைகளை பிள்ளைகள் சுலபமாக ஏற்றுக் கொள்வதால் நீங்களும் உங்கள் பிள்ளையும் தினமும் வாசிப்பதை ஆர்வத்துடன் எதிர்ப்பார்க்கலாம். உங்கள் பிள்ளைக்கு வாசிக்கவும், பேசவும் நீங்கள் நேரம் ஒதுக்குவது அதன் முக்கியத்துவத்தையும் அப்படி செய்வது சுவாரசியத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. முடிந்தவரை உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து அடிக்கடி வாசியுங்கள். பாடசாலையில் கற்றுக் கொள்ள உதவியாயிருக்க நீங்கள் செய்யக்கூடிய மிக முக்கியமான விஷயம் இதுவாகும். இதனால் உங்கள் பிள்ளையுடன் உயர்தரமாக நேரத்தை செலவிடலாம்: அத்துடன் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதால் ஆரோக்கியமான உறுதியான உறவை நீங்களும் உங்கள் பிள்ளையும் ஏற்படுத்தலாம்.

சில ஆலோசனைகள்:



- உங்கள் பிள்ளை மிக இளம்பிராயத்திலுள்ளபோதே அவருடன் சேர்ந்து வாசிக்க ஆரம்பியுங்கள்.
- உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து வாசிப்பதற்கு முழுக் கவனத்தைக் கொடுக்கக்கூடிய விசேடமாக குறிப்பிட்ட நேரத்தை தினமும் ஒதுக்குங்கள்.
- உங்கள் பிள்ளையுடன் நெருக்கமாக, ஆறுதலாக, இருந்து வாசிப்பதற்கு ஒரு வசதியான இடத்தை தெரிவு செய்யுங்கள். சேர்ந்தே ஒரு "வாசிக்குமிடத்தை" உருவாக்குங்கள்.
- பல்வேறு புத்தகங்களை தெரிவு செய்யுங்கள். உங்கள் பிள்ளையின் முதல் மொழி ஆங்கிலம் அல்லாவிடில், ஆங்கிலம், உங்கள் பிள்ளையின் தாய்மொழி ஆகியவற்றில் இரண்டிலுமே புத்தகங்களை தெரிவு செய்யுங்கள்.

ஒரு பிள்ளையின் தாய்மொழியில் உறுதியான அடித்தளம் இருத்தல் அப்பிள்ளை 2ம் மொழியையோ 3ம் மொழியையோ இலகுவாக கற்றுக் கொள்ள உதவும் - இந்த சந்தர்பத்தில், ஆங்கில மொழி.

- உங்கள் பிள்ளையின் வயது, ஆர்வம், கற்கும் வகுப்பு என்பவற்றிற்கு ஏற்ப வாசிக்கும் நேரத்தை வேறுபடுத்துங்கள். இளம்பிள்ளைகளுக்கு அநேக சிறு காலகட்டங்கள் (10 நிமிடம்) ஒரு நீண்ட காலகட்டத்தை விட (30 நிமிடம்) நல்லது.
- கதையில் வருவதை உங்கள் பிள்ளை கற்பனையில் உருவாகப்படுத்தும் வகையில், மெதுவாக வாசியுங்கள்.
- தனது கருத்தை தெரியப்டுத்துவதற்கும், கேள்விகளை கேட்பதற்கும் உங்கள் பிள்ளையை பாராட்டுங்கள்.
- வீட்டிலிருந்து வெளியில் சென்று தங்கும் போது, உங்கள் பிள்ளை வாசிக்கவும் கேட்கவும், கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள், பதிவு நாடாவிலுள்ள கதைகள் என்பவற்றை கொண்டுச் செல்லுங்கள்.
- வாசிப்பதற்கு உங்கள் பிள்ளை கற்றுக் கொண்ட பின்னரும், அவருக்கு தொடர்ந்தும் வாசித்துக் காட்டுங்கள். உங்கள் பிள்ளையின் வாசிக்கும் தரத்திற்கும் அதிகமான தரத்திலுள்ள புத்தகங்களை வாசிப்பதன் மூலம் உங்கள் பிள்ளை ஆர்வம் கொள்வது மட்டுமன்றி அவரின் புரிந்து கொள்ளும் திறனையும் விரிவாக்கும் அதேசமயம் - சேர்ந்து வாசிப்பதிலுள்ள வியப்புணர்வை உயிரூட்டலாம்.

## உத்தி 4 | புத்தகங்கள் பற்றி பேசுங்கள்

புத்தகங்களை வாசிப்பது எவ்வளவிற்கு முக்கியமோ அதே போல் புத்தகங்களைப் பற்றி பேசுவதும் முக்கியமானது! ஒரு கதையைப் பற்றியோ புத்தகத்தைப் பற்றியோ உங்கள் பிள்ளையுடன் பேசுவது, அப்பிள்ளை அதனை புரிந்து கொள்ளவும் தனது சொந்த அனுபவங்களுடன் தொடர்பு படுத்தவும் உதவும். இது உங்கள் பிள்ளையின் சொற்களஞ்சியத்தை புதிய சொற்களாலும் சொற்றொடர்களாலும் வளமூட்டவும் உதவும். விஞ்ஞான சஞ்சிகைகள், கணிணி பக்கங்கள் போன்ற தகவல்கள் உள்ள பதிப்புகளை வாசிப்பதற்கு உங்கள் பிள்ளையை தூண்டுங்கள். பிள்ளையுடன் அப்பதிவுகளைப்பற்றி பேசி, நிறைய கேள்விகள் கேளுங்கள். உங்கள் பிள்ளை புரிந்து கொள்ளவும், நியாயப்படுத்தவும், ஆழ்ந்து சிந்திக்கும் திறனை வளர்த்துக் கொள்ளவும் சில வழிகள்:

- எதைப்பற்றி வாசிக்க விரும்புகிறார் என உங்கள் பிள்ளையிடம் கேளுங்கள்.
- உங்கள் இளம்பிராயத்தில் உங்களுக்கு மிகவும் பிடித்த, புத்தகங்கள் பற்றி உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்.
- ஒரு கதை புத்தகத்தின் அட்டையையும் தலைப்பையும் பிள்ளையுடன் சேர்ந்து பார்த்து, கதையில் என்ன நிகழலாம் என்று ஊகிக்கும்படி கேளுங்கள்.
- வாசிக்கும் முன்பும், வாசிக்கும் போதும், வாசித்த பின்னும், கதையைப்பற்றியும், படங்கள் பற்றியும் கேள்விகள் கேட்கவும், விமர்சிக்கவும் உங்கள் பிள்ளையை தூண்டுங்கள்.
- எல்லா புத்தகங்களைப் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்க உங்கள் பிள்ளையை தூண்டுங்கள். காதாசிரியருடன் உங்கள் பிள்ளை ஆமோதிக்கிறாரா? நிராகரிக்கிறாரா? ஏன்? தகவல் சரியாக உள்ளதா இல்லையா?
- ஒரு புத்தகத்தை வாசிக்கும் போது அதைப்பற்றி உரக்க சிந்தியுங்கள். அவ்வாறு செய்ய உங்கள் பிள்ளையையும் தூண்டுங்கள். உதாரணமாக, “இதற்கு அர்த்தம் உண்டா? ஏன் அல்லது ஏன் இல்லை?”
- புத்தகத்தைப் பற்றி சிந்திக்க உங்கள் பிள்ளைக்கு அவகாசம் கொடுங்கள். சில நாட்களின் பின் அதைப்பற்றி பிள்ளையுடன் பேசுங்கள்.



## உத்தி 5 | உங்கள் பிள்ளை வாசிப்பதை கேளுங்கள்

உங்கள் பிள்ளை வாசிக்க கற்றுக் கொள்ளும் போது அவர் உரக்க வாசிப்பதை கேட்பது மிகவும் முக்கியம். உங்களுக்கு வாசித்து காட்டுவது, உங்கள் பிள்ளை வாசிக்கும் திறனை வளர்த்துக் கொள்ளவும், பயிற்சி பெறவும் உதவுகிறது. இவ்வாறு செய்வதால் பிள்ளையின் தன்னம்பிக்கை வளரும்.

உங்கள் பிள்ளை வாசிப்பதை கேட்கும் போது உங்கள் எதிர்ச்செயல்கள் முக்கியமானது என்பதை நினைவு கொள்ளுங்கள். முக்கியமாக, இடைமறிக்காமல் கேளுங்கள். உற்சாகத்துடன் உங்கள் பிள்ளையை அடிக்கடி பாராட்டுங்கள். முடிந்தால் உங்கள் பாராட்டுதலை குறிப்பாக வைத்துக் கொள்ளுங்கள். இதன் மூலம் உங்கள் பிள்ளை தான் எதனை சிறப்பாக செய்கிறதென அறிந்து கொள்ளுவார். இறுதியாக, தானாகவே வாசிப்பதற்கு உங்கள் பிள்ளையை ஊக்குவிக்க மறக்காதீர்கள். சில உத்திகள்:

- ஆர்வம் காட்டுவதன் மூலமும், கேள்விகள் கேட்பதன் மூலமும், புத்தகத்தை நீங்கள் ரசிப்பதை உங்கள் பிள்ளைக்கு காண்பியுங்கள்.
- பொறுமையாக இருங்கள். சிக்கலான வார்த்தைகளைப் புரிந்து கொள்ள உங்கள் பிள்ளைக்கு நேரம் கொடுங்கள். பிழைகள் விடுவதன் மூலமும் கற்றுக் கொள்வது எப்படி என உங்கள் பிள்ளைக்கு காட்டுங்கள்.
- எந்த இடையூறுகளும் இல்லாத நேரத்தை வாசிப்பதற்கு தேர்ந்தெடுங்கள்.
- மிகவும் கடினமாக இல்லாத புத்தகங்களை வாசிக்க தேர்ந்தெடுப்பதை உறுதி செய்யுங்கள். பாடசாலையில் பாவிக்கும் புத்தகங்களைவிட சுலபமான புத்தகங்களை உங்கள் பிள்ளை தெரிவு செய்தால் கவலைப்பட வேண்டாம். அதே சமயம், தனது வகுப்பு தரத்தை விட உயர்வான புத்தகத்தை உங்கள் பிள்ளை தெரிவு செய்தால், அவ்வாறு தெரிவு செய்வதற்கு பாராட்டுங்கள், தேவையாயின் உதவி செய்யவும் தயாராக இருங்கள். தமக்கு தாமே சவாலாக இருப்பது நல்லது என உங்கள் பிள்ளை கண்டு கொள்ளுவார்.
- தான் வாசிப்பதை தானே கேட்க உங்கள் பிள்ளையை ஊக்குவியுங்கள். கேட்பதன் மூலம் தான் அவர் விடும் பிழைகளை அறிந்து திருத்திக் கொள்ள உதவும்.
- உங்கள் பிள்ளை வாசிக்க ஆரம்பிக்கும்போது நீங்களும் பங்கு கொள்ள விரும்பலாம். மாறி மாறி வாசிக்கலாம், இல்லாவிடில் சேர்ந்தே வாசிக்கலாம்.
- வாசித்த பின், உங்கள் பிள்ளை கதையை விளங்கிக் கொண்டதை உறுதிப் படுத்த கதையைப் பற்றி பேசுங்கள்.



## உத்தி 6 | உங்கள் பிள்ளைக்கு ஒரு முன்னுதாரணமாக இருங்கள்

உங்கள் பிள்ளைக்கு மிக முக்கியமான முன்மாதிரி, பெற்றார் என்ற முறையில் நீங்கள் உங்கள் பிள்ளையுடன் வாசித்தும், எழுதியும் செய்யக்கூடிய நடவடிக்கைகள் சில:

- சமையல் குறிப்புகள், உணவு அட்டைகள், அட்டவணைகள், வழிகாட்டிகள், செயல்முறைகள், விளம்பரங்கள், விளம்பர பத்திரைகள், சிறு புத்தகங்கள் என்பவற்றை வாசியுங்கள்.
- போக்குவரத்து, கடை, உணவு விடுதிகளின் அடையாளங்களை வாசியுங்கள்.
- புத்தகங்கள், செய்தித்தாள்கள், அத்துடன்/அல்லது சஞ்சிகைகளை மகிழ்ச்சிக்காக வாசியுங்கள்.
- தொலைபேசி, புத்தகங்கள், சமையல் புத்தகங்கள், கைநூல்கள், தேசப்பட புத்தகங்கள், அகராதிகள் என்பவற்றிலுள்ள தகவல்களை பாருங்கள்.
- பொருள் பட்டியல், தொலைபேசி செய்திகள், நினைவூட்டுக் குறிப்புகள், அட்டைகள் என்பவற்றை எழுதுங்கள்.
- ஒரு குடும்ப நாட்காட்டியில் சந்திப்பிற்கான திகதிகள், நேரம் என்பவற்றை எழுதுங்கள்.
- கணணிசெய்திகள், வாழ்த்து அட்டைகள், கடிதங்கள் என்பவற்றை எழுதி வாசியுங்கள்.

தினமும், பல வகையிலும் எழுதுவதும், வாசிப்பதும் பாவிக்கப்படுவதை உங்கள் பிள்ளைக்கு காட்ட நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் தேவைகளுக்காக நீங்கள் வாசிப்பதையும் எழுதுவதையும் உங்கள் பிள்ளை பார்க்கும்படி செய்யுங்கள். உங்கள் பிள்ளையுடன் வாசிக்கும் எழுதும் நடவடிக்கைகளை செய்யும்போது புதிய வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் அறிமுகப்படுத்துங்கள்.



# நாலாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை

நாலாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்புவரையுள்ளவர்கள் பொதுவாக கனிஷ்ட வகுப்பினர் என்றும் கூறப்படுவர். கனிஷ்ட வகுப்புகளில் வழங்கப்படும் கல்வியறிவு, மாணவர்களை திறனாய்வுடைய, பொறுப்புள்ள, ஆற்றல்வாய்ந்த பேச்சுத்திறனுடையவர்களாக வளர்ச்சியுறுவதை நோக்காகக் கொண்டது.

கனிஷ்ட வகுப்புகளில் சேரும் மாணவர்கள் கல்வியறிவில் வெவ்வேறு கட்டங்களில் வளர்ச்சிப் பெற்றவர்களாக இருப்பார்கள். மற்றவர்களுக்கு வாசிப்பதிலும், எழுதுவதிலும் நிறைய அனுபவம் இருந்தபோதும் சில மாணவர்கள் சரளமாக வாசிக்கவும், எழுதவும் இப்போதுதான் ஆரம்பிக்கிறார்கள். பிள்ளைகள் கனிஷ்ட வகுப்புகளில் தொடர்ந்து படிக்கும் போது அவர்கள் தொடர்ந்து உடல்ரீதியாக, அறிவுரீதியாக, உணர்வுரீதியாக, சமூகரீதியாக மாறுவார்கள். கல்வியறிவை கற்பதற்கு இம்முக்கிய மாற்றங்கள் எவ்வாறு தூண்டுகிறதென்பதை அடையாளம் காண்பது ஒரு சவாலாகும்.

கீழ்வரும் வடிவமைப்பில் குறிப்பிட்டுள்ள சில தனிப்பண்புகள் கனிஷ்ட மாணவர்களிடம் காணப்படும்.

- தனது படிப்பில் பாதிப்பேற்படுத்தக்கூடிய தனித்துவமான திறமைகள், தேவைகள், அனுபவங்கள், அத்துடன் கலாச்சார தூண்டுதல்கள் ஆகியவற்றை ஒரு வகுப்புக்கு உங்கள் பிள்ளை கொண்டு வருகின்றது.
- தேகரீதியாக, அறிவுரீதியாக, உணர்வுரீதியாக, சமூகரீதியாக முக்கியமான மாற்றங்களை கனிஷ்ட வகுப்புகளில் உங்கள் பிள்ளை உணர்வார்.
- பிள்ளைகளுக்கு கல்வியறிவை கற்பிக்க, ஆசிரியர்கள் ஒவ்வொரு பிள்ளையின் தனிப்பட்ட, கலாச்சார அடையாளத்தை ஏற்றுக் கொண்டு உறுதிப்படுத்த வேண்டும். மொழியினதும், கல்வியறிவினதும் பலமான தூண்டுதலை, தெரிந்து கொள்ளும் முறையில் எல்லா பிள்ளைகளையும் வழிநடுத்த வேண்டும்.
- பால் வேறுபாடுகள், எவ்வகையில் ஆண், பெண் பிள்ளைகளைக் கவரும் புத்தகங்கள், செயல்முறைகள், கற்பிக்கும் அணுகுமுறைகள் போன்றவற்றை பாதிக்கின்றன என்பது, கனிஷ்ட வகுப்புகளில் அதிமுக்கியமாக கருத்திற்கொள்ளவேண்டியதொன்றாகின்றது.

இப்பதிப்பிலிருந்து தழுவப்பட்டது Literacy for Learning: *The Report of the Expert Panel on Literacy in Grades 4 to 6 in Ontario* (Toronto: Ministry of Education, 2004), பக்கம் 15.



## என் பிள்ளைக்கு நான் எப்படி உதவுவது?

பெற்றார் என்ற முறையில் வீட்டிலும், பாடசாலையிலும் உங்கள் பிள்ளையின் கற்றலுக்கு நீங்கள் பலவகைகளில் உறுதுணையாக இருக்கலாம். உங்கள் பிள்ளையுடன் செய்யக் கூடிய சில விஷயங்கள்:

- படிப்பதற்கு தேவையான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கேட்பதன் மூலம், உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் நல்ல உறவை வளர்த்துக் கொள்ளுங்கள்.
- வீட்டுப்பாடவேலைகளை முடிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தையும் இடத்தையும் ஒதுக்கி, ஒரு ஒழுங்கான வழிமுறையை உங்கள் பிள்ளையுடன் நிலைநாட்டுங்கள்.
- தினமும் இந்த வழிமுறையை கடைபிடிக்குமாறு உங்கள் பிள்ளைக்கு ஊக்குவியுங்கள். பாடசாலை வேலைகள், வெற்றிகள், கரிசனைகள், விருப்பங்கள் என்பவைப்பற்றி உங்கள் பிள்ளையுடன் கலந்தாலோசியுங்கள்.
- குறுக்கெழுத்து புதிர்கள், பிரெயின் டீசெர்ஸ், சொற்களை தேடுதல், என்பவற்றை செய்வதன் மூலம் உங்கள் பிள்ளையின் மனதுக்கு பயிற்சியளிப்பதை ஊக்கப்படுத்துங்கள்.
- உங்கள் பிள்ளையின் படிப்பில் பக்கபலமாக உதவுவதற்கு உங்கள் உறவினர், நண்பர்கள் என்போரையும் ஈடுபடுத்துங்கள்.
- சமூக வளங்களை பற்றி பரீட்சியமுள்ள, பெற்றார்-பிள்ளைகளை தற்காலிகமாக விட்டுச்செல்லும் நிலையங்கள் போன்ற சமூக நிறுவன அங்கத்தவர்களுடன் பேசுங்கள்.
- புதிய படிப்பில் ஈடுபட முயலும் போது உங்கள் பிள்ளையை பாராட்டும் அதே சமயம் உதவியும், பக்கபலமும் தேவைப்படும்போது அதையும் கொடுங்கள்.

நினைவு வைத்துக் கொள்ளுங்கள்: பொதுவாக நன்றாக வாசிக்கக் கூடிய பிள்ளைகளின் வீட்டிலுள்ள பெற்றோர்:

- வாசிப்பதில் ஈடுபாடு காட்டுவார்கள்
- பிள்ளைகளுக்கு வாசித்து காட்டுவார்கள்
- பிள்ளைகள் என்ன வாசிக்கின்றன, சிந்திக்கின்றன, செய்கின்றன என்பனபற்றி தங்கள் பிள்ளைகளுடன் பேசுவார்கள்.

## நான் என்ன உத்திகளை பாவிக்கலாம்?

### உத்தி 1 | தான் என்ன வாசிக்கின்றாரென்பதை உங்கள் பிள்ளை புரிந்து கொள்ளச் செய்யுங்கள்

ஒரு புத்தகத்திலுள்ள வார்த்தைகளை உங்களது பிள்ளை வாசிப்பது மட்டும் முக்கியமில்லை, ஆனால் தான் வாசிப்பதன் அர்த்தத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். பின்வரும் வழிமுறைகளை பாவித்து உதவி செய்வதன் மூலம் நீங்கள் உங்கள் பிள்ளை வாசிப்பதை புரிந்து கொள்ள உதவலாம்:

- தனக்கு ஏற்கெனவே தெரிந்தவற்றுடன் தொடர்பு படுத்துவது
- ஒரு கதையில் நடப்பதை மனதில் வடிவமைப்பு செய்வது
- வாசிக்கும் போது கேள்விகள் கேட்பது
- முக்கியமான குறிப்புகளை தீர்மானிப்பது
- உண்மையான அர்த்தத்தை வாசித்தறிவது
- தகவலை சுருக்கமாக்குவது அல்லது பகுதிகளை ஒருங்கிணைப்பது
- கடினமான வார்த்தைகளை அடையாளம் கண்டு கொள்ள வழிமுறைகளை கையாள்வது



இவ்வழிமுறைகளை உங்கள் பிள்ளைகளுடன் பாவிக்க சில ஆலோசனைகள்.

**கேள்விகள் கேட்பது:** “இது ஏன் நடக்கிறது”? “அடுத்து என்ன நடக்கும்”? அல்லது “இது அர்த்தம் உடையதா”? போன்ற கேள்விகள் கேளுங்கள். இப்படியான கேள்விகள், பிள்ளைகளுக்கு கதையின் வெவ்வேறு பகுதிகளிற்கிடையே உள்ள தொடர்பை ஏற்படுத்த உதவும்.

**உண்மையான அர்த்தத்தை வாசிப்பது:** வெளிப்படையாக கூறப்படாத கருத்தை கண்டுபிடித்து தனது அறிவு அனுபவம் இரண்டையும் கொண்டு ஒரு அர்த்தத்தை உருவாக்கி கொள்ள உங்கள் பிள்ளை கதையிலுள்ள தகவலை பாவிப்பதற்கு கற்றுக் கொள்ள வேண்டும். உண்மையான அர்த்தத்தை தெரிந்து கொள்வதற்கு வழியானது தடயங்களை சேகரித்து அவற்றினால் ஒரு அர்தத்தை அமைப்பதாகும்.

**ஒருங்கிணைத்தலும், சுருக்குதலும்:** தான் வாசித்த எல்லா தகவல்களையும் எடுத்து அதிலுள்ள முக்கிய விஷயத்தை சுருக்கி அதனைக் கொண்டு ஒரு புதிரை தீர்ப்பது போலவாகும்.

**கடினமான சொற்களின் அர்த்தத்தை கண்டுபிடிக்கும் வழி:** ஒரு கடினமான சொல்லினதோ, தனக்கு புரியாத ஒரு சொல்லினதோ அர்த்தத்தை அறிய உங்கள் பிள்ளை பல வழிமுறைகளை பாவிக்கலாம். சொல்லை உரக்க ஒலித்து பார்ப்பது பயனில்லாவிட்டால், உங்கள் பிள்ளையை பின்வருமாறு ஊக்கமளியுங்கள்:

- சொல்லை சிறு பகுதிகளாக பிரிக்கலாம்.
- கடினமான சொல்லிற்கு முன்னரும் பின்னரும் உள்ள வார்த்தைகளை திரும்ப திரும்ப வாசிக்கலாம்.
- அந்த வார்த்தையை அப்போதைக்கு தவிர்த்து விட்டு தொடர்ந்து வாசிக்கலாம்.
- அது வரை வாசித்தவற்றைப் பற்றி பேசி அர்த்தம் விளங்கியதா என்று பரிசோதிக்கலாம்.

தவறு ஒன்று இருந்து அது அர்த்தத்தை பாதிக்காவிட்டால் அதனை கண்டு கொள்ளாது விடுங்கள். ஒரு தவறினை அடையாளம் காண்பதற்காக, ஒரு வார்த்தையின் அர்த்தத்தை கண்டுபிடிக்க, உங்கள் பிள்ளைக்கு அவகாசம் கொடுங்கள்.

## உத்தி 2 | உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்

வாசிக்கும் திறனையும் எழுதும் திறனையும் விருத்தி செய்வதற்கான அடிப்படை, மற்றவர்களுடன் பேசுவதும், அவர்கள் பேசுவதை கேட்பதுமாகுமென ஆய்வுகள் காட்டுகின்றன. தமது கருத்துக்களை காகிதத்தில் பயனுள்ள விதத்தில் எழுது முன்பு, பிள்ளைகள் தமது எண்ணங்களைப் பற்றி அடிக்கடி பேச வேண்டும். உங்கள் பிள்ளை உங்களுடன் பேசுவதற்கு நீங்கள் ஊக்கமளிப்பதற்கு சில வழிகள்:



- அடிக்கடி உங்கள் பிள்ளை என்ன வாசிக்கிறார் எழுதுகிறார் என்பதைப் பற்றி அவருடன் பேசுங்கள்.
- வாசித்ததன் முக்கிய பகுதிகளைப்பற்றி திரும்ப கூறும்படி உங்கள் பிள்ளைக்கு கூறுங்கள். பிள்ளையின் எண்ணங்களை நெறிப்படுத்துவதற்கு, அவரிடம் கேள்விகள் கேட்டு தகவல்களை தரும்படி ஊக்கமளியுங்கள்.
- திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பாடல்கள், நாடகங்கள் பற்றி உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள். கருத்துக்களை வெளிப்படுத்தவும் அவற்றை நியாயப்படுத்துவதற்கும் பிள்ளைக்கு ஊக்கமளியுங்கள்.

- விடுமுறை நாட்கள், கொண்டாட்டங்கள் போன்ற குடும்பநிகழ்வுகளின் போது உங்கள் பிள்ளையை கதைகள் கூறச் செய்யுங்கள்.
- நகைச்சுவையான குடும்பக் கதைகளை மாறி மாறி பகிர்ந்துகொள்ளுங்கள்.
- உங்கள் பிள்ளை தனது கருத்துக்களையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ள ஊக்கமளியுங்கள்: முற்போக்காக இருங்கள்.
- நல்ல கேட்பனராக இருந்து உங்கள் பிள்ளை கூறுவதை கேட்பதில் ஆர்வம் காட்டுங்கள்.

## உத்தி 3 | வாசிப்பதை இன்பகரமானதாக்குங்கள்

சுவாரசியமான விஷயங்களை வாசிப்பதற்கு தெரிவு செய்ய உதவுவதன் மூலம் உங்கள் பிள்ளை வாசிப்பதை விரும்பும்படி செய்யலாம். உங்கள் பிள்ளை வாசிப்பதை விரும்பினால், அப்பிள்ளை நிறைய வாசித்து அதன் மூலம் தேர்ந்த வாசகர் ஆவார். உங்கள பிள்ளையை வாசிப்பதற்கு ஊக்கமளிக்க சில ஆலோசனைகள்:

- உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து வாசியுங்கள். சேர்ந்து வாசிப்பதைப் பற்றி பேசுங்கள். உதாரணமாக கதையில் வரும் கதாபாத்திரத்துடன் உங்கள் இருவருக்கும் தெரிந்தவர்களை ஒப்பிடுங்கள்.
- நீண்ட வாகண பயணம், ரயில் பயணம் என்பவற்றின் போது வாசிப்பதற்கு புத்தகங்கள், சஞ்சிகைகள், மற்றய வாசக பதிப்புகளை கொண்டு செல்ல உறுதிப்படுத்துங்கள்.
- புத்தக கடைகளிலும் நூலகங்களிலும் பிள்ளையுடன் சேர்ந்தே பாருங்கள். புத்தகங்களுடன், குருந்தட்டுகள், இணையதளம் ஆகியவற்றையும் பாருங்கள்.
- வாசிக்கும் பதிப்புகளிலுள்ள வடிவமைப்புகள் அதாவது படங்கள், தெளிவு படுத்தும் விளக்க படங்கள், வரைபடங்கள் என்பவற்றை பார்ப்பதற்கு உங்கள் பிள்ளையை ஊக்கப்படுத்துங்கள். அவற்றின் உபயோகத்தையும், அவை எவ்வாறு உபயோகிக்கப்பட்டுள்ளன என்பது பற்றியும் உங்கள் பிள்ளை விளங்கிக் கொள்ள உதவுங்கள்.
- Brand New Planet போன்ற இணையதளத்திலுள்ள இலவசமான வளங்களைப் (www.thestar.com/bnp) பாருங்கள்.
- இயற்கை, விளையாட்டுத்துறை, விஞ்ஞானம் அல்லது உங்கள் பிள்ளைக்கு விருப்பமான வேறு ஏதாவது ஒரு விஷயம் பற்றிய சிறுவர்களுக்கான சஞ்சிகைகளை பெற்றுக் கொள்ள சந்தா பெறுவது பற்றி யோசியுங்கள்.

பின்வருவன போன்ற பதிப்புகளை வாசிப்பதற்கு அநேகமான பிள்ளைகள் விரும்புவார்கள்:

- தங்களைப்பற்றி தமக்குள்ள வடிவத்தை வெளிப்படுத்தும் கதைகள்
- அவர்களது கலாரசனை, இசையார்வத்திற்கு ஒத்த பாடல்வரிகள் அல்லது ஆவணமூலங்கள்
- நகைச்சுவையான கதைகள் அல்லது கேலிச்சித்திரமுள்ள பதிப்புகள்
- விறுவிறுப்பான கதையமைப்பை அல்லது சதியை மையமாக கொண்ட கற்பனைக் கதைகள்
- வாசகருக்கும் அதில் வரும் கதாபாத்திரங்களுக்கும் தொடர்பை உண்டாக்கும் தொடர்முறையில் வெளிவரும் கதைப்புத்தகங்கள்.
- விஞ்ஞான கற்பனை அல்லது புனைவாற்றல் கதைகள்
- செய்தித்தாள்களும் சஞ்சிககைளும்



- நகைச்சுவைப்புத்தகங்கள், அடிபந்து அட்டைகள் போன்ற அச்சும் படங்களுமுள்ள பதிப்புகள்
- நகைச்சுவை, விளையாட்டு புள்ளி விபரங்கள், மூலைக்கு சவாலான புதிர்கள் போன்ற மற்றவர்களுடன் சேர்ந்து வாசிக்கக் கூடியவை
- உலகத்தைப் பற்றிய முற்போக்கான பலமான கருத்துக்களை கொண்ட புத்தகங்கள், மற்றும் கட்டுரைகள்

நகைச்சுவைப்புத்தகங்கள், குறுந்தட்டுகள், இணையவரியகங்கள் போன்ற பார்த்து படிக்கக்கூடிய பதிப்புகளை பிள்ளைகள் விரும்புவார்கள். இளம்வயதினருக்கான சில இணைவரியகங்களுக்கு பக்கம் 24ஐப் பார்க்கவும்.

## உத்தி 4 | உங்கள் பிள்ளையை எழுதுவதற்கு ஊக்கமளியுங்கள்

பல தரப்பட்ட காரணங்களுக்காக உங்கள் பிள்ளைக்கு எழுதுவதில் நிறைய பயிற்சி தேவைப்படுகிறது. அன்றாட அடிப்படையில் எழுதுவதற்கு உங்கள் பிள்ளையை ஊக்குவிப்பதற்கு நீங்கள் செய்யக் கூடியவை:

- நீங்கள் வாசிப்பதையும் எழுதுவதையும் உங்கள் பிள்ளை காணுமாறு செய்யுங்கள். உதாரணமாக ஒரு கடிதத்தை எழுதும்போதே திரும்ப வாசிப்பது, மளிகைப் பொருட்பட்டியல் தயாரிப்பது, அல்லது பயணத்தின் போது நாளோடு எழுதுவது.
- அர்த்தமுள்ள எழுதும் சந்தர்ப்பங்களை வீட்டில் தேடி உங்கள் பிள்ளையை கடிதங்கள், பட்டியல்கள், செய்திகள், தபாலட்டைகள், நன்றிக் குறிப்புகள் என்பனவற்றை வாசிக்கவும் எழுதவும் ஊக்கப்படுத்துங்கள்.
- குடும்ப விடுமுறைகளின் போது எடுத்த புகைப்படங்களைப் கொண்டு, ஒரு ஒட்டும் அட்டை புத்தகத்தை அமைத்து, புகைப்படங்களின் கீழ் வாசகங்கள், சிறிய விளக்கங்கள் என்பனவற்றை உங்கள் பிள்ளை எழுதுவதற்கு ஊக்கமளியுங்கள்.
- எழுதுவதை ஊக்குவிப்பதற்கு பிரியமான எழுத உதவும் பொருட்கள், தினசரி குறிப்பு எழுதும் புத்தகம், பேனாக்கள், ஒட்டிகள் என்பனவற்றை கொடுங்கள்.
- பலவகையான வார்த்தை விளையாட்டுகள் விளையாடுங்கள்.
- உள்ளூர் செய்தித்தாளில் வரும் எழுத்துப் போட்டிகளில் பங்கு கொள்ளவும், தான் வலிமையான கருத்துக் கொண்டுள்ள விஷயங்களைப்பற்றி பத்திரிகை ஆசிரியருக்கு கடிதம் எழுதவும் உங்கள் பிள்ளைக்கு ஊக்கமளியுங்கள்.
- உங்கள் பிள்ளைக்கு பிடித்த பதிப்புகளை இலவசமாக பெற்றுக்கொள்ள கடிதம் எழுதுமாறு ஊக்குவிக்கவும்.
- எழுதுவதை உங்கள் பிள்ளைக்கு விருப்பமான, நல்ல ஒரு அனுபவமாக அமைத்துக்கொடுங்கள்.



## உத்தி 5 | கலைகள் மூலம் கல்வியறிவை உயிர்ப்பியுங்கள்

கலைகளின் கல்வியில் நிகழ்த்தியுள்ள ஆய்வுகள், மொழிவிருத்திக்கும் கலைகளை கற்றுக் கொள்ளுவதற்கும் இடையில் உள்ள நெருங்கிய தொடர்பை காட்டுகிறது. நாடகம், நடனம், இசை, பார்வைக் கலைகள (visual arts) என்பவற்றின் அனுபவங்கள் மாணவர்களின் சுயவெளிப்பாட்டையும் கற்பனைத்திறத்தையும் வெளிக்கொணர்வதால் அவர்களை ஊக்கப்படுத்தி ஈடுபடச்செய்யும். பலதரப்பட்ட மக்களும் தமது புரிந்துணர்வை வளப்படுத்தவும் எண்ணங்களை வெளிப்படுத்தவும் கலைகளை பாவிக்கிறார்கள்.

கலைகளை உங்கள் பிள்ளை அனுபவிப்பதற்கு உதவுவதற்கு சில எண்ணங்கள்:

- நீங்கள் ஆக்கபூர்வமாயிருங்கள். உதாரணமாக, புகைப்படங்கள் எடுங்கள், அல்லது களிமண்ணில் மாதிரி உருவங்களை செய்யுங்கள்.
- கலைகளை (இசை, நாடகம், வரைபு) பாவித்து உங்கள் பிள்ளைகளை தமது சொந்த விளையாட்டுக்களை உருவாக்க ஊக்கமளியுங்கள்.
- கதாபாத்திரங்களை வரைவதன் மூலமோ நிறம் தீட்டுவதன் மூலமோ கதைகளை உருவாக்கும் திறமையை உங்கள் பிள்ளையிடம் விருத்தி செய்ய ஊக்கமளியுங்கள். ஒவ்வொரு படமும் ஒரு கதையை கூறுவதைப்பற்றிய கருத்தை கலந்துரையாடுங்கள்.
- உங்கள் பிள்ளை கேட்கும் இசையை அவருடன் சேர்ந்தே கேளுங்கள். ஒரு பாடலைப் பற்றியோ இசைக்குழுவைப் பற்றியோ விருப்பு வெறுப்பை விபரிக்குமாறு உங்கள் பிள்ளையிடம் கோறுங்கள்.
- கலைகளுக்கென பிரத்தியேகமான இணைய பக்கங்களை சேர்ந்தே ஆராயுங்கள்.
- எழுதுவதற்கு முன்பு வரைதல் மூலமோ, நாடகம் மூலமோ தனது எண்ணங்களை வெளிப்படுத்த முயலும்படி உங்கள் பிள்ளையை ஊக்கப்படுத்துங்கள்.
- கதைகளை நாடகமாக்கவோ, தானாக எழுதியதை நாடகப்படுத்தவோ உங்கள் பிள்ளையை ஊக்கப்படுத்தங்கள்.
- உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து கலைகளை ஆராயுங்கள். உதாரணமாக, பார்வை கலைக் (visual art) கண்காட்சிகளுக்கு செல்வது, இசைநிகழ்ச்சி, நாடகங்கள் என்பவற்றிக்கு செல்வது, உள்ளுர் கலைஞர்களை சந்திப்பது போன்றவற்றை செய்யுங்கள்.

## உத்தி 6 | ஒரு பண்பார்ந்த முன்னுதாரணமாகவிருங்கள்



பிள்ளைகளின் முதல் ஆசிரியர் என்ற முறையில், பெற்றோர் தொடர்ந்து சீராக தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல உதாரணமாகவிருக்க முயற்ச்சிக்கிறார்கள். பெற்றார் என்ற முறையில், உங்களுடைய ஈடுபாடும் பக்கபலமும் உங்கள் பிள்ளைகளுக்கு வாசிப்பதிலும் எழுதுவதிலுமிருக்கும் கவர்ச்சியிலும், அடையும் சாதனைகளிலும் விளைவு உண்டுபண்ணுவதாக இருக்கும். வாசிப்பதிலும் எழுதுவதிலும் உங்கள் சொந்த ஈடுபாட்டை காட்டும் வழிகளுக்கான சில ஆலோசனைகள்:

- புத்தகங்கள், செய்திதாள்கள், சஞ்சிகைகள் என்பவற்றில் நீங்கள் வாசிப்பதைப்பற்றி உங்கள் பிள்ளையுடன் அடிக்கடி பேசுங்கள். உங்கள் பிள்ளை என்ன வாசித்தது என்பதை கேட்டறியுங்கள்.

- பல்வேறு காரணங்களுக்காக நீங்கள் வாசிப்பதை காட்டுங்கள். உலக நடப்புகளை அறிந்து கொள்வதற்கு செய்தித்தாள் கட்டுரைகளை வாசியுங்கள். வெவ்வேறு வியாபார பொருட்களின் அடையாளங்களை ஒப்பிடுவதற்கு விளம்பரங்களை வாசியுங்கள். வார இறுதிக்கான கேளிக்கைகளை தீர்மானிக்க திரைப்படப் பட்டியலை பாருங்கள். உங்களது அபிமான குழுவின் விளையாட்டு செய்கைகளை அறிவதற்கு வளைகோல் ஆட்டக் குழுவின் ஸ்தானங்களைப் பாருங்கள். மகிழ்ச்சியுற நகைச்சுவைப்புத்தகங்களை வாசியுங்கள்.
- பல்வேறு தேவைகளுக்காக நீங்கள் எழுதுவதை காட்டுங்கள். உங்கள் பிள்ளையுடன் சேரந்து குறிப்புகளை எழுதுங்கள். உதாரணமாக துவிச்சக்கரவண்டிகளின் அளவுகள், நிறங்கள் பற்றிய குறிப்புகள். உங்களது உள்ளூர் செய்தித்தாளின் பத்திரைகை நிருபருக்கு ஒரு விஷயத்தைப் பற்றிய உங்களது பலமான அபிப்பிராயம் பற்றியோ, ஒரு பொருளினது குறையைப்பற்றி அதனது தயாரிப்பாளருக்கோ கடிதம் எழுதுங்கள்.

## உத்தி 7 | “திறனாய்வுடைய கல்வியறிவை” வீட்டிற்குள் கொண்டு வாருங்கள்

சமூகத்தில் மிக விரைவாக ஏற்படும் மாற்றங்கள் எமது வாழ்க்கைமுறையில் நேர்மறையான அல்லது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துமா என்று சிந்திக்க நாம் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் வாழும் உலகினை புரிந்து கொள்வதற்கு எழுத்திலோ, ஏனைய ஊடகங்களிலோ உள்ளோட்டமாக கூறப்பட்டுள்ள செய்திகளை ஆராயவும், கலந்தாலோசிக்கவும் பயிற்சியளிப்பது ஆழ்ந்து சிந்திக்கும் கல்வியறிவாகும். எழுத்திலும், வடிவிலும், பேச்சிலும், பலதரப்பட்ட ஊடகங்களிலும் அடித்தளத்திலுள்ள நம்பிக்கைகள், மனப்பாங்குகள் என்பவற்றை சவால் செய்யவும், புரிந்து கொண்டு கேள்விகள் கேட்கவும் அவை வழிவகுக்கின்றன.

ஆழ்ந்து சிந்திக்கும் கல்வித்திறமையை விருத்தி செய்ய உங்கள் பிள்ளைக்கு நீங்கள் உதவக்கூடிய வழிகள் சில:

- ஒரு புத்தகத்தினதோ கட்டுரையினதோ நோக்கத்தைப் பற்றியும், கதாசிரியர் அதை எழுதுவதற்கான காரணங்களைப் பற்றியும் பேசுங்கள்.
- பதிப்புகளும் வேறு ஊடகங்களும் ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தை அல்லது கருத்துக்கோணத்தைக் சுட்டிக்காட்டுகின்றன என்பதை உங்கள் பிள்ளைக்கு விளங்கிக்கொள்ள உதவுங்கள்.
- சமூக, கலாச்சார சமத்துவத்தை ஆராய்வதுடன் எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் தவறவிடப்பட்ட தகவல்களைத் தேடுங்கள்.
- ஒரு கதையைப்பற்றியோ, கட்டுரையைப்பற்றியோ உங்கள் கருத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்.
- தன்வயப்படுத்தலுக்கு மொழி எவ்வாறு உபயோகிக்கப்படுகிறது என்பதை கலந்தாலோசியுங்கள். உதாரணமாக, விளம்பரங்களில் பாவிக்கப்படும் மொழியிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்வையாளர்கள் பார்க்குமாறு ஊக்குவிக்க பாவிக்கும் உத்திகளினால் ஏற்படுத்தப்படும் சக்திவாய்ந்த விளைவுகளைப் பற்றி பேசுங்கள்.
- ஒரு நிகழ்ச்சி பற்றிய மற்றய வாசகர்களின் கருத்து வெளிப்பாட்டை ஆராயுங்கள். உதாரணமாக, ஒரு பத்திரிகையாசிரியருக்கு எழுதப்பட்ட கடிதங்கள்.
- உங்கள் பிள்ளையின் எண்ணங்கள், கருத்துக்கள், உணர்வுகள் என்பவற்றிற்கு மதிப்பு கொடுங்கள்.



விமர்சித்து வாசிப்பதற்கு உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கும் வகையில் நீங்கள் கேட்கக் கூடிய சில கேள்விகள்:

- இந்த புத்தகம் எதைப் பற்றியது? இதனை வாசிப்பதில் உங்களுக்கு ஆர்வம் ஏன்?
- இப்புத்தகத்தின் கதாசிரியர் நாம் எதை அறிந்து கொள்ள வேண்டுமென்று, அல்லது என்ன யோசிக்க வேண்டுமென்று நினைக்கிறார்? நாம் எதையாவது நம்ப வேண்டுமென விரும்புகிறாரா?
- பிள்ளைகள், இளைஞர்கள், பெற்றோர் பற்றி இந்த புத்தகத்தில் கதாசிரியர் என்ன சொல்கிறார்?
- எல்லா பிள்ளைகளும் இப்படியா இருக்கிறார்கள்?
- தான் சொல்ல விரும்பும் கருத்தை தெரியப்படுத்த கதாசிரியர் வார்த்தைகளையும், படங்களையும் எவ்வாறு பயன்படுத்தியிருக்கிறார்?
- இப்புத்தகத்திலுள்ள கருத்துகள் சமத்துவமானவையா?
- இப்புத்தகம் பற்றி நீங்கள் என்ன உணர்கிறீர்கள்?
- இப்புத்தகத்தை எழுதியவர் எப்படிபட்டவரென நீங்கள் நினைக்கிறீர்கள்?



# நான் எங்கு உதவி பெறலாம்?

நீங்கள் உங்கள் பிள்ளைக்கு எழுதவும் வாசிக்கவும் கற்பிக்க உதவுவதில் தனியாக இல்லை என்பதை நினைவில் வைத்திருங்கள்! நீங்கள் உதவி கேட்கக்கூடிய பலர் இருக்கிறார்கள் - உதாரணமாக உங்கள் பிள்ளையின் ஆசிரியர், குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள், மற்றும் சமூகத்திலுள்ள ஏனையவர்கள்.

## உங்கள் பிள்ளையின் ஆசிரியர்

உங்கள் பிள்ளை வாசிக்கவும் எழுதவும் உதவுவது சம்பந்தமான தகவல்களை பெறுவதற்கு நீங்கள் முதலில் அணுக வேண்டிய முதல்நபர் அவருடைய ஆசிரியரே. தங்கள் ஆசிரியருடன் இணைந்து தமது பெற்றோர் காரியமாற்றுவதை பிள்ளைகள் பார்க்கும் போது அவர்கள் அதிக நம்பிக்கையையும், பாதுகாப்பையையும் உணர்கிறார்கள். உங்கள் பிள்ளையின் கல்வியில் நீங்கள் ஈடுபாடு காட்டுவது, உங்கள் பிள்ளை பாடசாலையில் சிறப்படைய உதவும். பாடசாலை அதிபரும், பாடசாலை நிர்வாக ஊழியர்களும் உங்கள் பிள்ளைக்கு உதவும் உபாயங்களாக இருக்கலாம். உங்கள் பிள்ளையின் ஆசிரியரிடம் நீங்கள் கேட்கக் கூடியவை:

- வாசிப்பதிலும் எழுதுவதிலுமுள்ள இலக்குகள் எவை? இந்த இலக்குகளை நோக்கி உழைப்பதற்கு என் பிள்ளைக்கு எப்படி நான் உதவலாம்?
- வாசிப்பதிலும் எழுதுவதிலும் என்னுடைய பிள்ளையின் தற்போதைய சாதனைகள் என்ன?
- எந்த புத்தகங்களை எனது பிள்ளை சுலபமாக வாசிக்கிறார்? எந்த புத்தகங்களை வாசிப்பது கடினமாக இருப்பதாக அவர் உணர்கிறார்?
- எந்த புத்தகங்களை அல்லது கதாசிரியரை எனது பிள்ளை விரும்புகிறது?
- வாசிப்பதில் எனது பிள்ளைக்கு ஆர்வமிருப்பதாக தெரிகிறதா? நல்ல அனுபவத்திற்காகத்தான் எனது பிள்ளை வாசிக்கிறாரா?
- பாடசாலையில் வாசிப்பதற்கு என்ன வழிமுறைகளை எனது பிள்ளை பாவிக்கின்றார்?
- என் பிள்ளை வாசிக்கவும் எழுதவும் உதவுவதற்கு என்ன புத்தகங்களும் வழிகாட்டிகளும் உள்ளன?

உங்கள் பிள்ளை வாசிப்பதை கற்றுக் கொள்ளவும், குறிப்பாக கடினமான பகுதிகளை கையாளவும், உதவக்கூடிய பல்வேறு வழிமுறைகளைப் பற்றி உங்கள் பிள்ளையின் ஆசிரியர் யோசனை கூறலாம். உதாரணமாக, ஒரு வார்த்தையில் உங்கள் பிள்ளை கஷ்டப்படுவதானால் நீங்கள் அவரை ஊக்குவிப்பதற்கு:



- கதையிலோ, வசனத்திலோ எந்த வார்த்தை அர்த்தமுள்ளதாக இருக்குமென சிந்தியுங்கள்.
- ஒலியை பாவித்து வார்த்தையை எழுத்துக்கூட்டுங்கள்.
- ஒத்த சத்தமும், தோற்றமுள்ள ஒரு வார்த்தையை யோசியுங்கள்.
- வார்த்தையிலுள்ள பரீட்சியமான பகுதிகளை தேடுங்கள்.
- ஒரு வசனத்தில் எது சரியாக ஒலிக்குமென யோசியுங்கள்.
- படங்கள், நிறுத்தற்குறிகள் என்பவற்றிலுள்ள தடயங்களை சோதனை செய்யுங்கள்.
- மறுபடியும் பகுதியை வாசியுங்கள்.
- ஒரு வார்த்தையின் அர்த்தத்தை அறிய உதவி பெறுங்கள்.

## சமூகத்திலுள்ள மற்றவர்கள்

உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் மட்டுமன்றி உங்கள் சமூகத்திலுள்ள பல்வேறு மக்களுடன் நீங்கள் பேசலாம். உங்களுக்கு உதவக்கூடிய ஆலோசனைகள் சில:

- உங்கள் பிள்ளைக்கு ஊக்கமளிக்கவும் பக்கபலமாக இருக்கவும் - தாத்தா பாட்டி, மூத்த சகோதரர்கள், நண்பர்கள் ஆகியோரையும் ஈடுபடுத்துவதை ஆலோசியுங்கள்.
- பேசும் புத்தகங்களை, உங்கள் பிள்ளைக்கு பிடித்தமான புத்தகங்களை உங்கள் உள்ளூர் நூலகத்தில் பெறுங்கள். வாசிகசாலை நூலகரிடம் உதவி கேளுங்கள்.
- பெற்றோர்/பிள்ளைகளுக்கான நிலையங்கள் போன்ற சமூதாய நிறுவனங்களின் ஊழியர்களுடன் பேசுங்கள். சமூகத்திலுள்ள, உங்களுக்க உதவக்கூடிய உபாயங்களை பற்றி அவர்களுக்கு தெரிந்திருக்க சந்தர்ப்பமுள்ளது.
- உங்களது பிள்ளைக்கு வாசிப்பதில் சிரமம் இருந்தால், குடும்ப வைத்தியரிடம் அழைத்து சென்று பிள்ளையின் பார்வையையும், கேட்கும் சக்தியையும் பரிசோதித்து பாருங்கள். வாசிக்கும் திறனுக்கு தடையாக இருப்பது ஒரு ஆரோக்கிய குறைபாடாக இருக்கலாம்.

## அரசாங்க வளங்கள்

*The Kindergarten Program, 2006* (மறு பதிப்பு) *The Ontario Curriculum, Grades 1-8 Language, 2006* (மறு பதிப்பு) ஆகிய தலைப்புள்ள கல்வி அமைச்சின் கல்விதிட்ட பதிப்புகளை நீங்கள் பார்க்கலாம். இப்பிரதிகள் அமைச்சின் **www.edu.gov.on.ca** என்ற இணையதளத்தில் கிடைக்கும். பிரதிகளை பெற்றுக் கொள்ள ஒண்டாரியோ பதிப்புகள் இலவச தொலை பேசி 1-800-668-9938 அழையுங்கள். அல்லது இணை நிலையில் **www.publications.serviceontario.ca** வாங்கிக் கொள்ளலாம்.

Education Quality and Accountability Office (EQAO) இனது மூன்றாம் வகுப்பு ஆறாம் வகுப்பு தேர்வுகள் பற்றிய தகவலை EQAO **www.eqao.com** இணைய தளத்தில் பெறலாம்.





# இளம் வயதினருக்கான சில இணைய வளங்கள்

இப்பதிப்பின் போது கீழ்வரும் இணையவரியகங்கள் செயல் முறையிலுள்ளன. இவற்றிலுள்ளவை உங்கள் பிள்ளைக்கு இவை உகந்தனவா என்பதை முதலில் நீங்கள் அவற்றைப் படித்து அறிந்து கொள்ளுங்கள். உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து இவ்வரியகங்களை பார்க்கும் போது அவருக்குள்ள குதூகலத்தை அதிகரிக்கவும் பிறகு சுதந்திரமாக இந்த இணையவரியகங்களை தேடவும் வழிவகுக்கும்.

Ask for Kids - **www.askforkids.com**

Brand New Planet - **www.thestar.com/bnp**

Canadian Wildlife Federation - **www.cwf-fcf.org**

CBC Kids - **www.cbc.ca/kids**

Discovery Channel School - **school.discovery.com**

Funology - **www.funology.com**

Hockey Hall of Fame (காரியாலத்திற்குறிய இணையவரியகம்) -
**www.hhof.com/index.htm**

How Stuff Works - **www.howstuffworks.com**

Kids Click! - **www.kidsclick.org**

National Aeronautics and Space Administration (NASA)
**www.nasa.gov/audience/forkids/home/index.html**

National Geographic Kids -
**kids.nationalgeographic.com/portal/site/Kids/menuitem/**



Ontario Science Centre online - **www.ontariosciencecentre.ca**

PBS Kids - **pbskids.org/findit/**

Sports Illustrated for Kids - **www.sikids.com/**

TVOntario - **http://www.tvokids.com**

United Nations Cyber School Bus - **www.un.org/Pubs/CyberSchoolBus**

Virtual Museum of Canada - **www.virtualmuseum.ca**



**Ministry of Education**
Cette publication est disponible en français.
♻ இப்பதிப்பு மறுபயன்பாடு காகிதத்தில் அச்சிடப்பட்டது
ISBN 978-1-4249-5335-6 (Print)
ISBN 978-1-4249-5336-3 (PDF)
07-235 (rev.)

© குவீன் அச்சகம் ஒன்ராரியோ, 2008

**The Literacy and Numeracy Secretariat**
எழுத்தறிவு கணித அறிவு காரியாலயம்

இப்பிரசுரிப்பு பின்வரும் மொழிகளிலும் வழங்கப்படும்.
அரபிக், கன்டொநீஸ், பார்சி, பிராஞ்சு, இந்தி, கொரியன், மன்டரீன்,
போர்த்துகீஸ், பஞ்ஜாபி, ஸ்பானிஸ், தகலொக், தமிழ்,
வியட்ணமீஸ், உருது.

ஒவ்வொரு மாணவரையும் சென்றடைவதே எமது நோக்கம்

Ontario

Tamil